# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 243/34 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/34 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976, திசெம்பர் 17 ஆம் தேதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (தேயிலைத் தோட்ட வேலையாட்கள் குறைநிரப்புக்கூலி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரியானவர், இவ்வொழுங்குவிதிகளினால் அத்தகைய அதிகாரிக்கு வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவம், பணி அல்லது கடமை எதனையும் தொழிற்றிணைக்களத்தின் அலுவலர் எவருக்கும் கையளிக்கலாம்.

3. எழுத்திலான வேறெந்தச் சட்டத்திலேனும் அல்லது வாய்மொழி மூலமான, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் தொழில் ஒப்பந்தத்திலேனும் எது எப்படியிருப்பினும், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் வலுவும், பயனும் உடையனவாயிருத்தல் வேண்டும் ; அதற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் அல்லது ஒப்பந்தத்துக்கும் இடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் இருக்குமிடத்து, அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தம் எதனையும்விட இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

4. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் நூறு ஏக்கருக்குக் குறையாத பரப்பளவுடைய ஏதேனும் தேயிலைத் தோட்டத்தில் எவரேனும் வேலையாளைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், அவர் வேலை செய்யும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும், அத்தகைய வேலையாளுக்கு இதற்கான அட்டவணையின் நியதிகளின்படி கணிக்கப்பட்ட குறைநிரப்புக் கூலியொன்றைக் கொடுத்தல் வேண்டும்.

5. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1 ஆந் தேதிக்கு நேர்முன்னர், தேயிலை வளர்த்தல், உற்பத்தித் தொழிலில் தொழில்தருநர் எவராலும் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் 4 ஆம் ஒழுங்கு விதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவருமான ஒவ்வொரு வேலையாளும், அத்தகைய தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருக்கும் காலம்வரை 1975 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1 ஆந் தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று அத்தகைய வேலையாள் துய்த்த வேதனம், படி அல்லது பணத்திலான ஏனைய கொடுப்பனவுகளிலும் பார்க்க (அவை எப்பெயர் கொண்டு அல்லது குறிப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படினுஞ்சரி) வாய்ப்புக் குறைந்தனவல்லாத வேதனம், படி அல்லது ஏனைய பணத்திலான கொடுப்பனவுகள் தொடர்பான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றின்மீது அத்தகைய தொழில்தருநரால் அவ்வாறு தொடர்ந்து தொழிலுக்கமர்த்தப்பட்டுவரல் வேண்டும் ; இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கொடுக்கற்பாலதான குறைநிரப்புக் கூலியானது அத்தகைய வேதனம், படி அல்லது ஏனைய கொடுப்பனவுகளிலும் மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

6. தேயிலை வளர்த்தல், உற்பத்தித் தொழிலிலுள்ள வேலையாள் எவருக்கும் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி கொடுக்கற்பாலதான குறைநிரப்புக் கூலியானது, எழுத்திலான சட்டம் எதனதும் நோக்கங்களுக்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காக அவரது கூலியில் பகுதியாய் அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் வேலையாள் ஒருவருக்குக் கொடுக்கற்பாலதான ஏதேனும் பணத்தொகையைத் தொழில்தருநர் ஒருவர் அவ்வேலையாளுக்குக் கொடுக்கத்தவறியமை காரணமாக அத்தகைய தொழில்தருநர் நீதிமன்றமொன்றினால் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அத்தகைய தவறுக்கென நீதிமன்றம் விதிக்கக்கூடிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்தினுள் அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகையைக் கொடுக்கும்படி நீதிமன்றமானது அத்தகைய தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம் ; அத்தகைய பணத்தொகை அவ்வாறு கொடுக்கப்படாவிடின், அப்பணத்தொகையானது நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போல, நீதிமன்றக் கட்டளையின் மூலம் அறவிடப்படலாம்.

8. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"ஆணையாளர்", "தொழில்தருநர்", "கூலி" என்பன, முறையே சம்பள நிருணயசபைக் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தேயிலை வளர்த்தல், உற்பத்தித் தொழில்" என்பது அத்தகைய தொழில் தொடர்பாக சம்பள நிருணயச்சபைக் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"எல்லா மத்தியநிலத் தேயிலைக்குமான மாதாந்த சராசரி தேறிய விற்பனை விலை" என்பது தொழில் ஆணையாளரால் வெளிப்படுத்தப்பட்டு, சிங்களப் புதினப்பத்திரிகையொன்றிலும், தமிழ்ப் புதினப் பத்திரிகையொன்றிலும், ஆங்கிலப் புதினப் பத்திரிகையொன்றிலும் வெளியிடப்பட்டவாறான, கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் எல்லா மத்திய நிலத்தேயிலைக்குமான மாதாந்தச் சராசரி தேறிய விற்பனை விலை எனப் பொருளாகும்.

**அட்டவணை**

| நிரை I<br>கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் எல்லா மத்தியநிலத் தேயிலைக்குமான முன்னைய மாதத்திய மாதாந்தச் சராசரி தேறிய விற்பனை விலையானது | நிரை II<br>வேலையாளொருவருக்கு ஒரு நாளைக்குக் கொடுக்கற்பாலதான குறைநிரப்புக்கூலி |
|---|---|
| (அ) ரூ. 2.50 லிருந்து ரூ. 2.74 வரை இருக்குமிடத்து .. | 10 சதம் |
| (ஆ) ரூ. 2.75 லிருந்து ரூ. 2.99 வரை இருக்குமிடத்து .. | 20 சதம் |
| (இ) ரூ. 3.00 அல்லது அதற்கு மேல் இருக்குமிடத்து .. | 30 சதம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது